## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.52/2024

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜய் சாமிநாதன் | மதம் | : இந்து |
| த/பெ | : ஜெயம் | ஜாதி | : -- |
| வயது | : 38 | கிராமம் | : காரப்பாக்கம் |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : சோழிங்கநல்லூர் |

**18.02.2026**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பொறியியல் பட்டதாரி ஆவேன். எங்கு பணி செய்கிறேன் என்றால் சென்னை காரப்பாக்கத்தில் தனியார் நிறுவனத்தில் பணி புரிகிறேன். பெரும்பாலும் நான் வேலை செய்யும் ஊரில்தான் இருப்பேன் என்றால் நான் திருத்தணியிலும் இருப்பேன். காரப்பாக்கத்திலும் இருப்பேன். நான் பெரும்பாலும் காரப்பாக்கத்தில்தான் இருப்பேன் என்றால் இல்லை. திருத்தணியில்தான் இருப்பேன். நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் நாங்கள் செல்லும் இடத்திற்கான வழியை தடை செய்வதால் தடை செய்யக்கூடாது என இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். வழக்கு சொத்தின் புல எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் மொத்தம் 17 ஏக்கருக்கு மேல் இருக்கும். வழக்கு சொத்திற்கான புல எண் என்ன என்றால் புல எண்.151/6 ஆகும்.

2. வழக்கு சொத்தில் நான் குடியுள்ளேனா என்றால் அதற்கு அருகில் குடியுள்ளேன். நான் திருத்தணியில் உள்ளேனா அல்லது வழக்கு சொத்தில் குடியுள்ளேனா என்றால் நான் வழக்கு சொத்தான புல எண்.151/6க்கு அருகில் உள்ள புல எண்.151/5பி-ல் குடியுள்ளேன். வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது

என்றால் வெங்கடாபுரம் பூனிமாங்காடு–B ஆகும். எனக்கு திருத்தணியில் வீடு உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு அருகில்தான் தங்கியுள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)